www.Padasalai.Net www.TrbTnpsc.com

| முதல் திருப்புதல் தேர்வு - 2024 | 12ஆம் வகுப்பு | |
|---|---|---|
| **தமிழ்** | மதிப்பெண்கள் 90 | நேரம் 3.00 மணி |

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 14 x 1 = 14

1. *'மின்னேர் தனியாழி வெங்கதிரொன்றே ஏனையது தன்னேர் இலாத தமிழ்'* – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்
   அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர்மோனை, சீர் எதுகை
   இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடிமோனை
2. குடும்பம் என்ற சொல் முதன்முதலில் இடம் பெற்ற நூல் எது?
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) தொல்காப்பியம் ஈ) அகநானூறு
3. 'பாரதி கடிதங்கள்' எனும் நூலின் தொகுப்பாளர்
   அ) சிற்பி பாலசுப்பிரமணியன் ஆ) ரா.அ.பத்மநாபன் இ) கவிகேசரிசாமி தீட்சிதர் ஈ) பரலி சு.நெல்லையப்பர்
4. தமிழில் திணைப்பாகுபாடு .......... அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
   அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு
5. முதலிகல் என்ற கதையின் ஆசிரியர்
   அ) உத்தம சோழன் ஆ) அய்யப்ப மாதவன் இ) புதுமைப்பித்தன் ஈ) அழகிரிசாமி
6. *'குகப்படலம்'* – இடம்பெறும் காண்டம்
   அ) அயோத்தியா காண்டம் ஆ) ஆரணியகாண்டம் இ) பாலகாண்டம் ஈ) சுந்தரகாண்டம்
7. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு எது?
   அ) 1992 ஆ) 2005 இ) 2009 ஈ) 2010
8. திண்ணியர் என்பதன் பொருள்
   அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர் இ) தீக்காய்வர் ஈ) அறிவிலார்
9. *'உலா உற வந்து கூடும், உடுபதி, இரவி ஒத்தார்'* – யார் யார்?
   அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி
10. பொருட்பாலில் உள்ள இயல்களின் எண்ணிக்கை அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5
11. கலைச்சொல் தருக – Platform அ) நடைமேடை ஆ) இருப்புப்பாதை இ) பயணச்சீட்டு ஈ) தொடர்வண்டி
12. இவற்றுள் வேறுபட்ட பொருள் தரும் சொல்
   அ) அரலை ஆ) அரி இ) ஆழி ஈ) செறு
13. *'ஆர்ப்பரிக்கும் கடல் அதன் அடித்தளம் மௌனம் ; மகா மௌனம்'* – அடிக்கள் புலப்படுத்துவது
   அ) இரைச்சல் ஆ) குறைகுடம் கூத்தாடும்
   இ) நிறைகுடம் நீர்த்தழும்பல்இல் ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது
14. முதியோர் பாதுகாப்பு குறித்து பேசும் சிறுகதை
   அ) முதல்கல் ஆ) உரிமைத்தாகம் இ) தலைக்குளம் ஈ) கோடைமழை

**II. எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி.** 3 x 2 = 6

15. அணி இலக்கணம் மட்டும் பேசும் இலக்கண நூல்களைக் குறிப்பிடுக.
16. ஞாலத்தின் பெரியது எது?
17. *'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது'* – விளக்கம் தருக.
18. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?

**III. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி.** 2 x 2 = 4

19. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?
20. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?
21. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக.

**IV. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி.** 7 x 2 = 14

22. *முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம்* – இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.
23. உவமைத்தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக – கிணற்றுத்தவளை போல
24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
   *எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய்.*
25. மயங்கொலிச்சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுது – *கலை, களை, கழை*
26. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக. *உதியன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்*



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக – அ. வைத்து ஆ. கண்டான்
28. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. *அ) பூம்பாவாய் ஆ) தலைக்கோல்*
29. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக. *முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்*
30. விடைக்கேற்ற வினா அமைக்க. *நடுவண் அரசு 2005 ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.*

**V. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி.** **2 x 4 = 8**

31. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.
32. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.
33. தாயும் தந்தையும் பணிக்குச் சென்று விட்டால் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
34. சென்னையில் பண்பாட்டு அடையாளங்களில் இன்னும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

**VI. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி.** **2 x 4 = 8**

35. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
36. *சூதும் கள்ளும் கேடு தரும்* – திருக்குறள் வழி விவரிக்க.
37. யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.
38. கொடை வழங்குவதில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

**VII. எவையேனும் 3 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி.** **3 x 4 = 12**

39. நிரல்நிறை அணி (அல்லது) உவமை அணியை சான்றுடன் விளக்குக.
40. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக – யானைக்கும் அடிசறுக்கும்
41. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்தைக் கூறி ஏற்புடைய நயங்கள் மூன்றை எழுதுக.

*வெட்டி யடிக்குது மின்னல் – கடல்*
*வீரத் திரைகொண்டு விண்ணையிடிக்குது*
*கொட்டி யிடிக்குது மேகம் – கூ*
*கூவென்று விண்ணைக் குடையுது காற்று*
*சட்டச்ச சட்டச்சட டட்டா – என்று*
*தாளங்கள் கொட்டிக் கணைக்குது வானம்*
*எட்டுத்திசையும் இடிய – மழை*
*எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா !*

42. பாடாண்திணை அல்லது பரிசில் துறையை சான்றுடன் விளக்குக.
43. (காது கேளாதோருக்கான வினா) கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்குரிய விடை தருக.

திருக்குறள் பரிமேலழகர் உரை, சூடாமணி நிகண்டு, நன்னூல் – சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை என்று பல நூல்களை ஆறுமுக நாவலர் பதிப்பித்தார். இலக்கண நூல்கள், பூமி சாஸ்திரம் முதலான பாடநூல்கள் அவரால் ஆக்கப்பட்டன. புராண நூல்களை வசனமாக எழுதி அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவாக மாற்றினார். தமது இல்லத்தில் அச்சுக்கூடம் நிறுவி பல நூல்களை அச்சிட்டார். திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு நாவலர் பட்டம் வழங்கியது. பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தைத் தமிழிலில் மொழியெயர்க்கவும் உதவினார் ஆறுமுக நாவலர்.

1. இலக்கண நூல், பூமி சாஸ்திரம் – இவை எவ்வகையான நூல்கள்?
2. ஆறுமுக நாவலருக்கு நாவலர் பட்டம் வழங்கியது யார்?
3. புராணங்களை எளிய வடிவில் உருவாக்கியவர் யார்?
4. விவிலியத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?

**VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3 x 6 = 18**

44. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க. (அல்லது)
ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவர் வழி நின்று நிறுவுக.
45. அ) நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து – இத்தலைப்பின் கருத்தையொட்டி மாணவர்களாகிய உங்கள் கருத்தைப் பதிவிடுக. (அல்லது)
ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.
46. அ) உரிமைத்தாகம் கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க. (அல்லது)
ஆ) மயிலையார் ஓர் ஆராய்ச்சிப் பேரறிஞர் என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

**IX. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4 + 2 = 6**

47. அ) துன்பு உளதுஎனின் .......... எனத்தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.
ஆ) சினம் – என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com